(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC. NO.149/2018

**Depostitions of PW- 2 Witness for**

| Name | திரு. சுந்தரவேல் | Caste | |
|---|---|---|---|
| Father's name | சுந்தரபாண்டியன் | Calling | கூலி வேலை |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of May- 2024.

Signature of Witness.

22.05.2024

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை–**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 சுந்தர்ராஜ் என்பவரை எனக்கு தெரியும். விபத்தில் இறந்த மாயாண்டி ( எ)பிதுன்குமார், கல்யாணக்குமார் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 07.06.2018 ம் தேதி காலை 08.30 மணியளவில் நானும், எனது அண்ணன் முருகனும் திருவில்லிபுத்தூரில் இருந்து செண்பகத்தோப்பிற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது கனிமத்தேவர் தோப்பு அருகே நாங்கள் சென்றபோது இருசக்கர வாகனத்தின் மீது அதிவேகமாக வந்த டிராக்டர் ஒன்று மோதி சென்றுவிட்டது.

2. டிராக்டரின் பதிவெண் TN 67 AQ 2518 ஆகும். இருசக்கர வாகனத்தில் வந்த சுந்தர்ராஜன், மாயாண்டி, கல்யாணக்குமார் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. மாயாண்டிக்கு தலையில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அருகில் இருந்த நபர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

காயம்பட்டவர்களை அழைத்துச்சென்றோம். எனது தம்பி சுந்தர்ராஜினையும், கல்யாணக்குமாரையும் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லுமாறு மருத்துவர்கள் பரிந்துரை செய்தனர்.

3. மதுரை அரசு மருத்துவமனையில் எனது தம்பியும், கல்யாணக்குமாரும் சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஒரு வாரம் கழித்து கல்யாணக்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரி தான் சம்பவ சமயத்தில் விபத்தை ஏற்படுத்திய டிராக்டரை ஓட்டி வந்த நபர் ஆவார். இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தை மாயாண்டி என்பவர் ஓட்டி வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

4. வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.